**24.10.2024**

**OS No.28 of 2023**

PW.2 திரு. பழனி, தந்தை பெயர். தேவண்ணன் வா.சா.2 மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு 1, 2 பிரதிவாதிகளுக்காக குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

<u>**குறுக்கு விசாரணை**</u> : – ( 1, 2 பிரதிவாதிகள்)

தாவா நிலம் 2 1/2 ஏக்கர் பரப்பளவு கொண்டது. பிரதிவாதி பாபு கிரானைட் கம்பெனி கட்டுவதற்காக தாவா சொத்தை வாடகைக்கு கேட்டார் என்றால் அது தவறு. பிரதிவாதி தாவா சொத்தை 15 ஆண்டுகளுக்கு லீசுக்கு கேட்டார் என்றால் சரி அல்ல. நான் லீசு பத்திரம் எழுதி கொடுத்திருக்கிறேன் என்றால் சரி அல்ல, டிராப்டு பத்திரம் தான் கொடுத்திருக்கிறேன். அதில் நானும் என்னுடைய தம்பியும் கையெழுத்து போட்டு கொடுத்திருக்கின்றோம் என்றால் சரி தான். அந்த பத்திரத்தில் பிரதிவாதி பாபுவும் அவரது மகனும் கையெழுத்து போட்டு கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னால் எனக்கு அது தெரியாது. அந்த பத்திரம் இரண்டு படிகளாக தயார் செய்யப்பட்டு ஒரு படி என்னிடமும் மற்றொன்று பிரதிவாதிகளிடமும் இருக்கின்றது என்றால் சரி அல்ல. இந்த லீசுக்காக மொத்த அட்வான்ஸ் தொகை எவ்வளவு வாங்கியிருக்கிறோம் என்பது என்னுடைய தம்பிக்கு தான் தெரியும். தாவா சொத்திற்கு மாத வாடகை பேசவில்லை. தாவா சொத்தை பிரதிவாதிகளுக்கு லீசுக்கு கொடுத்த பின்பாக அந்த இடம் பள்ளமாக இருந்ததால் பிரதிவாதிகள் தங்களது செலவில் அதில் நான்கு அடி உயரத்திற்கு மண்ணைப் போட்டு நிரப்பினார்கள் என்றால் சரி அல்ல. பின்னிட்டு இயந்திரங்களை நிறுவ வேண்டும் என்பதால் பெரிய தொழில் கூடத்தை கட்டினார்கள் என்றால் அது தவறு. பின்னிட்டு பிரதிவாதிகள் கோடிக் கணக்கில் செலவு செய்து அந்த இடத்தில் இயந்திரங்களை நிறுவினார்கள் என்றால் சரி அல்ல. அந்த இயந்திரங்களை இயக்குவதற்காக மின் இணைப்பு பெற்றார்கள் என்றால் சரி அல்ல. பிரதிவாதிகள் தொழில் நடத்தும் பொழுது அவ்வப்பொது நாங்கள் சென்று தொந்தரவு செய்து வந்தோம் என்றால் சரி

அல்ல. இந்த இடத்திற்கு பக்கத்திலேயே நாங்கள் குடியிருக்கின்ற வீடு இருக்கின்றது என்று சொன்னால் சரிதான். தாவா சொத்து தொடர்பாக Munsif நீதிமன்றத்தில் நான் ஒரு வழக்கை தாக்கல் செய்திருந்தேன் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கில் நீதிமன்றத்திலிருந்து நீதிமன்ற ஆணையர் நியமணம் செய்யப்பட்டு ஆணையர் அவர்கள் வழக்கு சொத்தை வந்து பார்வையிட்டாரா என்றால் ஆணையர் வந்தார் ஆனால் வழக்கு சொத்தின் உள்ளே வரவில்லை. நான் பொய்யாக சொல்லுகிறேன் என்றாலும் ஆணையர் உள்ளே வந்து பார்வையிட்டு அங்கே என்ன என்ன இயந்திரங்கள் இருக்கின்றது மற்றும் தளவாடங்கள் இருக்கின்றது என்பதை எழுதிக்கொண்டார் என்று சொன்னால் சரி அல்ல ஆணையர் பிரதான சாலையில் எங்களை அழைத்து வாய்வழியாக பேசிவிட்டு சென்றுவிட்டார். நான் தவறாக சொல்லுகிறேன் என்றாலும் என் முன்னிலையிலும் எங்களது வழக்கறிஞர் முன்னிலையிலும் ஆணையர் வழக்கு சொத்தை பார்வையிட்டார் என்றால் சரி அல்ல. எழுதப்பட்டதாக சொல்லப்படும் டிராப்டு எழுதிய தேதியிலிருந்து எத்தனை ஆண்டுகள் கழித்து வழக்கறிஞர் ஆணையர் வந்து எந்த தேதியில் பார்வையிட்டார் என்பதை என்னால் சொல்ல முடியுமா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. பிரதிவாதிகளுக்கு அட்வான்சை திருப்பி கொடுத்ததாக சொல்லியிருக்கிறேன், அதனை எந்த முறையில் திருப்பி கொடுத்தேன் என்றால் ரொக்கப் பணமாக திருப்பிக் கொடுத்தேன். அந்த தொகை எவ்வளவு என்றால் ரூ.10 லட்சம். அந்த பணத்தை கணகராஜ் மற்றும் விஜயபரபு ஆகியோர் முன்னிலையில் வைத்துக் கொடுத்தேன். அவ்வாறு பணம் கொடுத்தற்கு எதாவது எழுதி வாங்கினேனா என்றால் அப்படி எதுவும் எழுதி வாங்கவில்லை. விஜயபிரபு வெள்ளவேடுவைச் சேர்ந்தவர் கணகராஜ் பழஞ்சூரைச் சேர்ந்தவர். இந்த பணம் பிரதிவாதிகள் அலுவலகத்தில் வைத்துக் கொடுக்கப்பட்டது. நான் முற்றிலும் பொய்யாக சொல்லுகின்றேன் என்றால் தவறு. நான் முதலில் போட்ட வழக்கை வாபஸ் வாங்கிவிட்டேன் என்றால் அது தவறு. அதன் பிறகு பாபு என் மீது மற்றொரு வழக்கை தாக்கல் செய்தார் என்றால் சரி தான். அந்த வழக்கை 15

ஆண்டுகளுக்கு எழுதி கொடுக்கப்பட்ட லீசு பத்திரம் இருக்கும் நிலையில் இடைப்பட்ட காலத்தில் அந்த லீசு பத்திரத்தை பதிவு செய்து கொடுக்க வேண்டும் என்று ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்திருந்தார் என்று சொன்னால் சரிதான். அந்த வழக்கு நிலுவையில் இருந்து வருகின்றது என்றாலும் இன்னும் அவ்வழக்கு முடிவிற்கு வரவில்லை என்று சொன்னாலும் சரிதான். அதற்கு பிறகு நான் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கின்றேன் என்றால் சரிதான். இந்த வழக்கை நான் எதற்காக தாக்கல் செய்திருக்கின்றேன் என்றால் பிரதிவாதி ரவுடிகளை கொண்டு அத்துமீறி உள்ளே புக முயற்சி செய்தார்கள் இதனை தடுப்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கின்றேன். பிரதிவாதிகள் ஏற்கனவே சுவாதீனத்தில் இருப்பதால் அவர்கள் அத்துமீறி தாவா சொத்தில் உள்ளே வருவதற்கு தேவையே இல்லை என்றால் அது தவறு. தாவா சொத்தில் இன்றைக்கும் தொழில் நடத்துகின்ற தொழில் கூடங்களும் இயந்திரங்களும் இருப்பதை இப்போது போனால் கூட பார்க்கலாம் என்றால் அது தவறு, அது போல ஏதும் இல்லை. தற்போது கூட நீதிமன்ற உத்தரவின் பேரில் ஒருவரை அனுப்பி தாவா சொத்தை பார்த்துவர சொல்லாமா என்றால் பார்த்துவரச் சொல்லலாம்.

**மறுவிசாரணை :– இல்லை.**